# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,968 — 1918 ம் ஹு புரட்டாதிமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களால் பிரசித்தம்.

பெரிய பிரித்தானியாவுக்கு அயர்லந்தும் சேர்ந்த ஐக்கிய இராட்சியத்தினதும் கடல்களுக்கப்பாலுள்ள அதிபத்தியங்களினதும் அரசரும் சமயபரிபாலகருமாகிய மகத்துவம் பொருந்திய ஐந்தாம் ஜோர்ஜ் வேந்தர் நாமத்தையிட்டு:

மகாகீர்த்திபொருந்திய சென்ற் மைக்கேல் சென்ற் ஜோர்ஜ் என்னும் வரிசையின் நயிற் கொமான்டர் என்னும் பட்டவர்த்தனரும், பிறிட்டிஷ் இராணுவ மகா மகிமை வாய்ந்த நயிற் கொமான்டர் என்னும் பட்டவர்த்தனரும் மகா கௌரவம் பொருந்திய பாத் வரிசையின் கொம்பானியன் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத் தீவுக்கும் அதனைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியு மாகிய உத்தமனூர் சேர் உவிலியம் ஹென்றி மெனிங் அவர்களாற் செய்யப்படும்

### விளம்பரம்.

டபிள்யு. எச். மெனிங்.

1907 ம் வருஷம் நாட்டுப் பள்ளிக்கூடக் கட்டளைச் சட்டத்தின் 19 ம் பிரிவின்படி மாத்தளை டிஸ்திறிக் பாடசாலை கம்மிற்றியா லியற்றப்பட்டுக் குறித்த சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவின்படி பெலப்பிக்கப்பட்டு 1909 ம் வருஷம் புரட்டாதிமாதம் 10 ந் தேதியும் 1912 ம் ஹு மார்கழிமீ 20 ந் தேதியும் செய்யப்பட்ட பிரசித்தங்களைக்கொண்டு 1909 ம் ஹு புரட்டாதிமீ 17 ந் தேதியும் 1912 ம் வருஷம் மார்கழிமாதம் 28 ந் தேதியும் கவர்ணமேந்து "கசற்" பத்திரிகைகளில் சில உபவிதிகள் வெளியிடப்பட்டிருப்பதாலும் குறித்த டிஸ்திறிக் பாடசாலைக் கம்மிற்றியாராற் குறித்த உபவிதிகளில் 2 ம் 5 நொம்பர் உபவிதிகளை நீக்கி அவைக்குப் பதிலாய் 1917 ம் வருஷம் 34 ம் நொம்பர் கட்டளைச் சட்டத்தால் திருத்தப்பட்ட நாட்டுப் பள்ளிக்கூடச் சட்டத்தின் 20 (1) (b) ம் பிரிவின்படி இதன் அட்டவணையில் காணும் உபவிதிகள் இயற்றப்பட்டிருத்தலினாலும்.

இலங்கைத் தேசாதிபதியாகிய நாம் குறித்த சட்டத்தின் 20 ம் பிரிவின் (2) ம் கீழ்ப் பிரிவின்படி எமக்குண்டாகிய தத்துவங்களைக்கொண்டும் அதிகார மந்திரசபையின் ஆலோசனையோடும் குறித்த 2 ம் 5 ம் 20 விதியின் நீக்கத்தையும் டிஸ்திறிக் பாடசாலைக கம்மற்றியாரால் இயற்றப்பட்டு இதன் அட்டவணையிற் காணலாகும் உப விதிகளையும் பெலப்பிக்கின்றோ மென்பதை நீவிர் அறிந்துகொள்வீராக.

இலங்கைத்தீவில் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு புரட்டாதிமாதம் பதின்மூன்றாந் தேதி கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கலோனியல் சக்கிறுத்தார்.

கடவுள் அரசரைக் காத்தருள்க.

---

மாத்தளை டிஸ்திறிக் பள்ளிக்கூடச் சங்கத்தாராற் செய்யப்பட்ட 1907 ம் வருஷத்து நாட்டுப் பள்ளிக்கூடச் சட்டத்தின் 2 ம், 5 ம், 5a ம், 5b ம் இலக்கங்களின்கீழ் கட்டளைச்சட்டம்.

குறிக்கப்பட்ட அட்டவணை.

2 ம் இலக்க உபவிதி,—ஆறு வயதுக்குக் குறையாததும் பதினான்கு வயதுக்கு மேற்படாததுமான ஒவ்வொரு பையனினதும் ஆறு வயதுக்குக குறையாததும் பன்னிரண்டு வயதுக்குக் கூடாததுமான ஒவ்வொரு பெண்பிள்ளையினதும் சோனக அல்லது தமிழ்ப் பிள்ளையாயிருந்தால் ஆறு வயதுக்குக் குறையாததும் பத்து வயதுக்குக் கூடாததுமான பெண்பிள்ளையினதும் பெற்றோர் அப்படிப்பட்ட பையனின் அல்லது பெண்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள்பண்ணினாலொழிய அல்லது பள்ளிக்கூடத்துக்கு போகாதிருக்க நியாயமான மன்னிப்பு இருந்தாலொழிய அப்படிப்பட்ட பையனை அல்லது பெண்பிள்ளையை இதனோடிணைக்கப்பட்ட அட்டவணையில் விவரித்திருக்கும் பள்ளிக்கூட மொன்றில் சேர்ந்து படிக்கப்பண்ணவேண்டும். புறனடை (a) ஆயினும் மூன்று மைல் தூரத்துக்கப்பாலிருக்கும் ஓர் பாடசாலைக்கு எப்பிள்ளையாவது போவதற்குக் கட்டாயம்பண்ணப்படமாட்டாது. (b) பெண்பிள்ளைகள் மாத்திரம் படிக்கும் பாடசாலையல்லாத பாடசாலைக்கு எந்தப் பெண்பிள்ளையும் போவதற்குக் கட்டாயம்பண்ணப்படமாட்டாது.

5 ம் இலக்க உபவிதி.—ஆயினும் பத்தாம் பதினான்காம் வயசுக்கிடையிலுள்ள ஒரு பிள்ளை கிராமச் சங்கத்தின் வலைவரின் திருப்திக்கு நன்மையாய்ப் பிரயோகிக்கப்பட்டு, அவன் அல்லது அவள் தற்போதுக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட 4 ந் தரத்தில் வாசனையிலும், வாசகத்திலும், கணக்கிலும் தேற்சிபெற்றதாக ஒரு வித்தியாதரிசியிடமிருந்து செட்டிபிக்கற் கைக்கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தேள்வையிராது.

5A ம் இலக்க உபவிதி.—பள்ளிக்கூடம் வைக்கவும் அல்லது பள்ளிக்குப் போகவேண்டிய வயதுள்ள பிள்ளைகளிருக்கும் வகுப்பு அல்லது வகுப்புகளுக்கு ஓர் பள்ளிக்கூட அறையில் அல்லது முன்னர் பள்ளிக்கூடமாகப் பாவிக்கப்படாத கட்டிடத்தில் ஆங்கிலேய அல்லது வேறு பாசையில் பாடஞ்சொல்லிக்கொடுக்கவும் விரும்புவோரெவரும் அப்படிப் பள்ளிக்கூடம் துவங்க அல்லது பாடஞ்சொல்லிக்கொடுக்க குறைந்த கணக்கில் ஒரு மாசத்திற்கு முன்னராக கிட்டவுள்ள வித்தியாதரிசிக்கு அறிவிக்கவேண்டும். அத்துடன் வைத்துப் படிப்பிக்கும் வகுப்பு அல்லது வகுப்புகளைப்பற்றியும், படிப்பிக்கப்போகும் பாடங்களைப்பற்றியும் வித்தியாகர்த்தர் தேள்வைப்பட்ட மாதிரியாய் அறிவிக்கவேண்டும்.

5B ம் இலக்க உபவிதி.—ஊர்ப்பிரிவுப் பாடசாலைச் சங்கத்தலைவர் பள்ளிக்குப் போகவேண்டிய வயதுள்ள ஒரு பிள்ளையை அவருக்குப் பிரியமான காலத்துக்கு பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் விலக்கலாம்.

---

பெரிய பிரித்தானியும், அயர்லந்தும் ஆகிய ஐக்கிய ராச்சியத்துக்கும் கடல்களுக்கும் அப்பாலுள்ள வைகளாகிய பிறிற்றிஷ் ஆதியதாய் நாடுகளுக்கும் இராசாவும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவ நாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்கள் நாமத்தினாலே :

மகாகீர்த்திபொருந்திய சென்ற் மைக்கேல் சென்ற் ஜோர்ஜ் என்னும் வரிசையின் நயிற் கொம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும் பிரித்தானிய இராணுவ மகா மகிமைவாய்ந்த நயிற் கொம்மான்டர் என்னும் பட்டவர்த்தனரும் மகா கௌரவம்பொருந்திய பாத் வரிசையின் கொம்பானியன் என்னும் பட்டவர்த்தனரும், இலங்கைத் தீவுக்கும் அதனைச்சார்ந்துள்ள நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியுமாகிய உத்தமனார் சேர் உவில்லியம் ஹென்றி மெனிங் அவர்களால் செய்யப்படும்

## விளம்பரம்.

டபிள்யு. எச். மெனிங்.

இத்தால் நீங்களறிவ தென்னவென்றால், இலங்கைக்கு ஆட்சி அதிகாரியாகிய நாம், எம்மேல். 1907 ம் ஆண்டின் நாட்டுப் புறப் பாடசாலைச் சட்டத்தி 20 (2) ம் பிரிவின்படி வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டும், அதிகார மந்திரசபையாரது ஆலோசனையைக்கொண்டும், கொழும்பு டிஸ்திறிக் நாட்டுப்புறப் பாடசாலைச் சங்கத்தவர் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ம் பிரிவின் கீழ் திருத்தப்பட்ட, 1917 ம் ஆண்டின் 34 ம் இலக்க நாட்டுப்புறப் பாடசாலைச்சட்டத்தின் (திருத்தப்பட்ட) கீழே காட்டி பிரசித்தம்பண்ணப்படும் துணைப்பிரமாணத்தை இத்தால் பெலப்படுத்தி உறுதிப்பண்ணுகிறோம்.

இலங்கைத்தீவில் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு புரட்டாதிமாதம் பதிமூன்றாந் தேதி கொழும்பில் கொடுக்கப்பட்டது.

உத்தமனார் கட்டளைப்படி,

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,

அக்ற்றிங் கொலோனியல் சக்கிறத்தார்.

கடவுள் அரசரைக் காத்தருளுக.

### துணைப்பிரமாணம்.

பிரிவு 20 (1) (எ).—ஒரு பள்ளிக்கூடத்தைத் துவங்குகிறதற்கு விருப்பப்படுகிற, அல்லது ஆங்கிலேயத்தில் அல்லது வேறெப்பாஷையிலாவது கல்விப்பயிற்சிசெய்ய முன்னரே அவ்வித பயிற்சி செய்விக்காத பள்ளிக்கூட அறையில் அல்லது ஓர் கட்டிடத்தில், பள்ளிக்கூடத்திற்கு போகும் வயதுள்ள பிள்ளைகளுக்கு வகுப்பு அல்லது வகுப்புகள், துவங்குகிற ஒவ்வொருவரும், அவ்விதவேலை அல்லது பயிற்சி துவங்குகிறதற்கு ஒரு மாசத்துக்கு முன்னரே அப்படித் தான் துவங்கப் போகிற பள்ளிக்கூட அல்லது கல்விப்பயிற்சியைப்பற்றி சமீபத்திலுள்ள வித்தியா இன்ஸ்பெகரர் அல்லது உதவி இன்ஸ்பெக்டருக்கு அறிவித்தல்செய்தும் அதன்பின்னர் வித்தியாகர்த்தருக்குத் தேள்வையான விபரங்களை அதாவது தான் நடத்தப்போகின்ற வகுப்பு அல்லது வகுப்புகள் அல்லது கல்விப்பயிற்சி இன்னதென்பதைப்பற்றியும் அறிவித்தல் செய்யவேண்டும்.

இத்துணைப்பிரமாணத்தை அசட்டைபண்ணி மீறுகிற ஒவ்வொருவரும் குற்றவாளியாகக் காணப்பட்டால் 10 ரூபாவுக்கு மேற்படாமல் குற்றமும் குற்றமிறுக்கத் தவறினால் 14 நாளுக்கு மேற்படாத காலத்துக்கு ஊழியமில்லா மறியலுக்கும் ஆளாவார்.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

1917 ம் மார்கழிமீ 3 ந் திகதி புத்தளம் ஸ்தான சங்கத்தின் 3 ம் இலக்கங்கொண்ட தீர்மானத்தின்படி, இதன்கீழ் வரையப்பட்டும் புத்தளம் ஸ்தான சங்கத்தின் எல்லைக்குள் பின்வருமிடங்கள், 1898 ம் ஆண்டின் 13 ம் கட்டளைச்சட்டத் தோடணைத்திருக்கும் D எழுத்துப்பெற்ற செடூலின் 8 ம் அத்தியாயத்தின் 4 ம் பிரிவின்படி சனங்கள் குழிப்பு முழுக்கு முதலிய செய்வதற்கும், வஸ்திரம் குதிரை மாடு கழுவுவதற்கும் பாவிக்கப்படும்.

நம்பர் 1. குழிப்பு முழுக்கு.

கெடுங்குளம் செட்டித்தெரு ஜூபிலிக் கிணறுகள், கொழும்பு யாழ்ப்பாண ரோட்டிலிருக்கும் உடையாவெளிக்குளம், அனுராசபுர வழியிலிருக்கும் பெரிய வில்லு.

நம்பர் 2. குதிரை மாடுகளுவுதற்கு.

புத்தளஞ் சலாபம் ரோட்டு காட்டுக்குளம், செட்டித்தெரு வெட்டுக்குளம், மரிக்கார் தெரு அம்பிலார்குளம், மரிக்கார் தெரு குடயாமிச்சகுளம், குருணகல்ரோட்டு இறவல்குளி, அனுராசபுரம் ரோட்டு மணக்குண்டு குளம்.

நம்பர் 3. சீலை களுவுதற்கு.

அனுராசபுர வளியிலிருக்குஞ் சின்ன வில்லு, கொக் ரோட்டிலிருக்கும் மலயப்பன்குளம், கொழும்பு யாழ்ப்பாண ரோட்டு வண்ணான் குளம், சர்விஷ் ரோட்டு ஒமரிக்குளம்.

புத்தளம் ஸ்தான சங்கக கந்தோரில்,
1918 ம் ஆண்டு புரட்டாசிமீ 12 ந் உ.

டபிள்யு. ஈ. உவேயிற்,
சங்கத்தலைவர்.

## காணி விற்பனவுகள்.

No. 875, N. P.—1918 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5 ந் திகதி, செவ்வாய்க் கிழமை பகல் 1 மணியளவில் தன் ஆபீசில் வடமாகாணத்து கவர்ண்மேந்து ஏசண்டவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது நிர்ணயிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 29 காணித் துண்டுகள், வடமாகாணத்து யாழ்ப்பாணம் வடமராட்சியிலும் மறு பகுதிகளிலு மிருக்கின்றன.

பிளான் இலக்கம் 5,026. குறிச்சி—வத்திராயன். உரித்தாளி—அரசாட்சி.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தீர்ப்புவிலை எக்கரோக்குக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 26 | கடல்கரைநிலம் .. | — | .. என். முத்தரும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 1 23 .. | 180 |
| 27 | டிை .. | — | .. என். சின்னப்பிள்ளையும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்தநிலம் .. | 0 0 38 .. | 150 |
| 28 | டிை .. | — | .. கே. சபாபதியும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 8 .. | 130 |
| 29 | டிை .. | — | .. வீ. சின்னத்தம்பி கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 6 .. | 200 |
| 30 | டிை .. | — | .. எம். சின்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 10 .. | 200 |
| 31 | டிை .. | — | .. கே. பொன்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 2 7 .. | 20 |
| 32 | டிை .. | — | .. என். கணபதிப்பிள்ளையும் மறுபேரும் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 22 .. | 25 |
| 33 | டிை .. | — | .. எம். சின்னையாவும் மறுபேரும் கூட்டிச்சேர்ந்த நிலம் . | 0 0 30 .. | 50 |
| 34 | டிை .. | — | .. வீ. கந்தப்பும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 1 33 .. | 30 |
| 35 | டிை .. | — | .. சடையரும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 2 1 .. | 25 |
| 36 | டிை .. | — | .. பண்டாரி முருகர்க்கு கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 20 .. | 20 |
| 37 | டிை .. | — | .. என். விஞ்சித்தம்பி கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 33 .. | 50 |
| 38 | டிை .. | — | .. சவரி பெண் பிள்ப்பாள் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 1 27 .. | 30 |
| 39 | டிை .. | — | .. எம். கதிர்காமரும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 2 4 .. | 40 |
| 40 | டிை .. | — | .. கே. பொன்னையாவும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 26 .. | 25 |
| 41 | டிை .. | — | .. என். இளையதம்பியும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 38 .. | 35 |
| 42 | டிை .. | — | .. கே. பொன்னையா கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 15 .. | 25 |
| 43 | டிை .. | — | .. சரமுத்தர் பெண் சிவகாமி கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 32 .. | 35 |
| 44 | மணல்காடு .. | — | .. ரோட்டுக்கு விடப்பட்ட நிலம் (விற்பனவில்லை) .. | 0 1 39 .. | — |
| 47 | கடல்கரைநிலம் .. | — | .. வீ. தம்பர் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 36 .. | 140 |
| 48 | டிை .. | — | .. எம். கந்தையா கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 33 .. | 200 |
| 49 | டிை .. | — | .. கே. பொன்னம்பலமும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 37 .. | 110 |
| 50 | டிை .. | — | .. கதிர்காமர் பெண் சின்னச்சி கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 1 25 .. | 280 |
| 51 | டிை .. | — | .. ஒழுங்கைக்கு விடப்பட்ட நிலம் (விற்பனவில்லை) .. | 0 0 8 .. | — |
| 52 | டிை .. | — | .. பொன்னையா மகள் செல்லாச்சியும் மறுபேருக் கூட்டிச்சேர்ந்த நிலம் .. .. .. | 0 1 18 .. | 120 |
| 53 | டிை .. | — | .. பொன்னம்பலம் மகள் லெட்சுமிப்பிள்ளை கூட்டிச்சேர்ந்த நிலம் .. | 0 0 30 .. | 25 |
| | | | பிளான் இலக்கம் 4,983. குறிச்சி—தொல்புரம். உரித்தாளி—அரசாட்சி. | | |
| 1 | பனட்டன்காடு அல்லது புராவத்தன் குளக்கரை .. | ஈ. சீ. அருணாசலம் .. | பனந்தோட்டம் .. .. .. | 0 3 18 .. | 80 |
| | | | பிளான் இலக்கம் 5,062. குறிச்சி—ஆலங்குளம். உரித்தாளி—அரசாட்சி. | | |
| 1 | பூக்குளக்கரை .. | பரமு பொன்னையா .. | காடு புகையிலைச்செய்கைக்குத் தகுந்தது .. .. | 0 3 38 .. | 16 |
| | | | பிளான் இலக்கம் 4,050. குறிச்சி—மீசாலை வடக்கு. உரித்தாளி—அரசாட்சி. | | |
| 2 | மாத்தனாய் .. | — | .. கல்நிலம் .. .. .. | 0 3 15 .. | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் வடமாகாணம் கவுண்மேந்து ஏசண்டுத்துரை யிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகாரரின் பெரிய துரை யிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் செக்கிறத்தார் ஆபீஸ்,
கொழும்பு, 1918 ம் ஹூ புரட்டாதிமீ 12 ந் உ.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் செக்கிறத்தார்.

---

## அரசாங்கியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவலப்பிட்டியிலிருக்கும் டாக்குத்தருடைய வீட்டுக்கு கொச்சு வீடும், குதிரை இலாயமுங் கட்டுதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,868. பட்டணம்—நாவலப்பிட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிரிந்ச்ஷெஸ்ட் தோட்டம் .. | தப்பர் .. | வெளஸ்ரெட் சகோதரர் கொம்பனியார் .. | 0 0 38·31 |
| 2 | டிை .. | டிை .. | டிை .. | 0 0 4 |

எடுத்துக்கோள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஹூ ஒக்டோபர்மாசம் 17 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1918 ம் ஹூ செப்டெம்பர்மீ 20 ந் உ.

சீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசென்று.

---

1876 ம் ஹூ-த்து 3 ம்இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின்பிரகாரம் கல்லுக்குளி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,854. குறிச்சி—மாத்தளைடிஸ்திறிக் தபிதலாவெவும் கிப்புறுவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கிரிவெலதோட்டம் .. | வெண்கிலம் .. | ஜெனறல் சிலோன் டியும் றபர்கொம்பெனி லிமிடெட் .. .. | 0 0 11·4 |
| 2 | வெதககாரயாகேவத்த | வெண்கிலம் ஒரு கித்துமரம் மாத்திரமிருக்குது .. | (1) மெனிக்கா வெதகாரயா, (2) கெ. கிரு, (3) டி. மம்மதுதம்பி, (4) யு. றன்கிரு, (5) கெ. மெனிகா (6) யு. களுவா .. | 0 1 8·5 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 3 | வெதககாரயாகேவத்த | தோட்டத்தில் பாக்குமரங்களும் மற்றும்சில்லரையும் | (1) வி. மெனிக்கா, (2) கே. கிரு, (3) யு. தங்கிரு, (4) கெ. மெனிக்கி, (5) யு. கரு | 0 0 14·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ ஐப்பசிமாசம் 16 ந் தேதியிலன்று 2 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1918 ம் ஞூ புரட்டாதிமீ 17 ந் உ.

ஈ. றி. மிலிங்றன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சவம்புதைக்க பிட்டனி ஏற்படுத்த என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 10,949. குறிச்சி—மடிக, பட்டணத்துள்ளே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பொலவத்தைதெனிய அல்லது பொலவத்தைவத்தை .. | .. தோட்டம் | .. டீ. என். வீரதுங்க | .. 0 2 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ ஒக்டோபர்மீ 26 ந் தேதியிலன்று பகல் 11 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1918 ம் ஞூ சப்டம்பர்மீ 14 ந் உ.

தீ. ரீட்,
அரசாட்சி உப ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பம்பைமடுவிலிருந்து பாலைமோட்டைக்கு றோட்டுத் திறத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,044. குறிச்சி—பெரியகட்டு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பெரியகட்டுக்கமம் .. | நெல்வயல் .. | கே. நல்லசேகரம்பிள்ளை .. | 0 2 39·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ ஐப்பசிமாதம் 31 ந் தேதியிலன்று 12 மணிக்கு வவனியாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கச்சேரி,
1918 ம் ஞூ புரட்டாதிமீ 6 ந் உ.

ஈ. எவ். மாஷல்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதுளை மூர்தவளியை பெருப்பிப்பதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 2,014. குறிச்சி—வதுளை லோக்கல் போட், பட்டணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | றெட்னகொட .. | ஒரு வருஷம் சென்ற பிலா, தேங்காய், றபர் மரங்கள் உள்ள தோட்டம் | தீ. தீ. ரீ. வீ. எம். வண்டாற நாயக்க | 0 3 10·5 |
| 2 | அசுறமகாலீ அத்தவத்த .. | 6 வருஷம் துவக்கம், 25 வருஷம் காலம் சென்ற 17 தென்னை மரம், அத்துடன் பாக்கு, ஈரபிலா, பிலா, கன்சுரிய, தோடை, இலுமிச்சை மரங்களும் உள்ளன | சேய். அப்புசிங்கோ .. | 0 3 20·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞூ அற்பசிமாதம் 18 ந் தேதியிலன்று 1 மணிக்கு வதுளை கச்சேரியில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளை கச்சேரி,
1918 ம் ஞூ பிரட்டாசிமீ 10 ந் உ.

எவ். மார்ஷல்,
ஊவா அரசாட்சி ஏசண்டுக்காக.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,018, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1918 ம் ௵ (செப்ரெம்பர்) புரட்டாசி௴ 20 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே ளே கொழும்புக் கந்தோரில் மேல்மாகாணம் கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் அல்லது எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப் பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. கே. எச். கம்வெல்,
கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணிகளின் விவரம்.

மேல்மாகாணம் நீர்கொழும்பு டிஸ்திரிக் கப்பிற்றிகாம் கோறளை உடுகசபற்று போத்தல கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபட இலக்கம் 14,813.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 2920A | விலிகுலகண்டகெல (முடிக்குரிய காணிக்குப் போகிறதற்கு வழிக்காகச் சேமிக்கப்பட்டது) .. | 0 1 14 |

எல்லைகளாவன: வடகிழக்கு-முடிக்குரிய விலிகுலகண்டகெலவும், 320,768 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலமும்; கிழக்கு-309,657 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; தென் கிழக்கு-265,778, ம் 262,647 ம் உருமைப்படங்களில் காட்டிய நிலங்கள்; தென் மேற்கு-முடிக்காக சேமிக்கப்பட்ட விலிகுலகண்டகெல; மேற்கும் வடமேற்கும்-329,441 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்.

II.—பிரதமபட இலக்கம் 14,813.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 2921A | விலிகுலகண்டகெல (முடிக்குரிய காணிக்கு போகிறதற்கு வழிக்காக சேமிக்கப்பட்டது) .. | 0 1 1 |

எல்லைகளாவன: வடகிழக்கு-முடிக்குரிய விலிகுலகண்டகெல; தென்கிழக்கு-329,442 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; மேற்கு-261,779 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; வடமேற்கு-329,442 ம் உருமைப்படத்தில் காட்டியநிலம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1714—1715 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 7,019, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ௵ புரட்டாசி௴ 20 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேலமாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

சி. வி. பிறேயின்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறித்த காணிகளின் விபரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் பஸ்துன் கோறளை மேற்கிலுள்ள இட்டகொடபத்துவில் வலகெதற என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைத்திருக்கும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் 16,467.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 1 | களுத்துவே (கன்சபாவ றோட்டுக்குச் சேமித்த நிலம்) .. .. | 0 0 16 | 5 | களுத்துவே .. .. | 0 0 16 |
| 2 | களுத்துவே .. .. | 4 0 18 | 6 | ஷை .. .. | 0 3 31 |
| 3 | களுத்துவே (நீரோட்டத்துக்குச் சேமித்த நிலம்) .. .. | 0 3 38 | 7 | களுத்துவே (ஆற்றுக்காகச்சேமித்தநிலம்) | 0 1 31 |
| 4 | களுத்துவே .. .. | 0 0 23 | 8 | ஷை ( ஷை ) | 1 0 9 |
| | | | | | 7 3 22 |

எல்லைகளாவன: வடக்கு-என். பொடிசின்னோவும் மற்றவர்களு முரித்தாடும் நவத்துவேகும்புற; கிழக்கு-என். பொடிசின்னோவும் மற்றவர்களு முரித்தாடும் நவத்துவேகும்புற, வெலிபென்னகங்க; தெற்கு-கதுறுவத்தேவல; மேற்கு-இற்றபனவிலிருந்து பெரும்றோட்டுக்குப் போகும் கன்சபாவ றோட்டு.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1715 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

## அரசாட்சியாரால எடுத்துக்கொள்ளப்படும் உரிமைப்பேசப்படாத காணி.

இத்துடன் அணைத்திருக்கும் டாப்பில் காட்டப்படுகின்றவும், மத்திய மாகாணத்து கண்டி டிஸ்திறிக்கில் யட்டினுவரைப்பகுதியில் கண்டிப் பட்டண நகரசங்க எல்லைகளுள்ளிருக்கும் "அப்பர் லேக்" றோட்டிலிருந்து றோஸ்னீத் தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற றோட்டுக்கணித்தாயும் "காசில்கில்" கொட்டகைக்குக்கிட்டவும் இருக்கின்றவும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதுமான இரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்றுபேர்ச் விஸ்தாரமுள்ள துண்டுக்காணி சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாயமாகவும் விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும், இதனால்சகலரும் அறியவேண்டியது என்னவென்றால் மத்திய மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் சாள்ஸ் ஸ்ருவாட் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் எனக்குக்கொடுக்கப்பட்ட தத்துவத்தின்பேரினாலும், அதியுத்தம தேசாதிபதியின் ஆக்ஞைப்படியும், 1919 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 30 ந் தேதியிடி அல்லது அதற்கு முன்பாக அக்காணியின் சொந்தக்காரரினால அல்லது உரித்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்துகிறேன்.

சீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

கண்டிக் கச்சேரி, 1918 ம் ௵ ஆகஸ்டு௴ 29 ந் திகதி.

குறிக்கப்பட்ட டாப்பு.

48,708 ம் இலக்க உரிமைப்படத்தில் விவரிக்கப்பட்ட 66 ம் இலக்கக் காணித்துண்டு. எல்லைகளாவன: வடக்கு-67 ம் இலக்கக் காணித்துண்டு (48,814 ம் இலக்க உரிமைப்படம்); கிழக்கே-42 ம் இலக்கக் காணித்துண்டு (47,404 ம் இலக்க உரிமைப்படம்), 41 ம் இலக்கக் காணித்துண்டும் (47,404 ம் இலக்க உரிமைப்படம்); தெற்கே-65 ம் இலக்கக் காணித்துண்டு (48,707 ம் இலக்க உரிமைப்படம்); மேற்கே-ரேஞ்னீத்தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற ரோட்டு.

விசாலம்: 2 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச்.

1845 ம் ஆண்டு அக்டோபர்மாதம் 22 ந் திகதியில் அரசாட்சியாரால் கௌரவ டீ. எவ். வோட்டெஸ்கு அவர்களுக்கு விற்கப்பட்டது.

---

ஒப்பந்தபத்திரங்களைப்பற்றிய அறிவித்தல.

1919 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ந் தேதி வரைக்கும் நிலாவெளி,

(a) உப்புக் குதங்களிலிருந்தும்,

(b) உப்பள மேடைகளிலிருந்தும்,

(c) உப்புக்குத மெடைகளிலிருந்தும்,

1. திருக்கோணமலை பழைய உப்புக்குதங்களுக்கு அதாவது காட்டுப்பகுதித்தலம், பகிரங்கவேலைக் கட்டிட அடைப்பு, ரேகுத்தரை என்னும் இடங்களுள் அமைக்கப்பட்டுள்ள குதங்களுக்கும், (2) பீரங்கியடிக் குதங்களுக்கும் உப்பு ஏற்றிவந்து சேர்ப்பதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றது.

2. (a) வகையில் ஒப்பந்தக்காரர் உப்பை நிறுத்து ஏற்றுக்கொள்வர், (b) (c) வகைகளில் செய்கைக்காரர் உப்பை நிறுத்து ஒப்பந்தக்காரர் கொண்டுவரும் சாக்குகளில் நிறைத்துவிடுவர்.

3. உப்பு ஈரமாயிருந்தால் அந்தர் நிறை திருக்கோணமலை உதவி இராஜகாரியஸ்தரது கருத்துப்படி 113 றூத்தல் தொடக்கம் 166 றூத்தலாகக் கணக்கிடப்படும்.

4. ஐயாயிர அந்தருக்குக் குறைய ஏற்றுமதிசெய்யும்படி ஒருபோதும் ஒப்பந்தகாரன் கேட்கப்படமாட்டார். உதவி இராஜகாரியஸ்தரது அறிவித்தல் ஒப்பந்தகாரரது திருக்கோணமலை விலாசத்தில் கிடைத்த ஒரு கிழமையில் ஏற்றுமதி ஆரம்பித்தல் வேண்டும். ஒப்பந்தகாரரது திருக்கோணமலை விலாசம் இவ்வொப்பந்தத்தின் எவ்வறிவித்தலும் கொடுக்க ஏற்க போதியதாக விருக்கும்.

5. நிறுவை குதச்சேர்வை உட்பட அந்தர் ஒன்றுக்கு ஒப்பந்த விகிதம் இன்னதென்று காட்டல்வேண்டும்.

6. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் நாளாந்தம் (a) வகையில் 300 அந்தருக்குக குறையாதும், (b) (c) வகைகளில் முறையே 250 அந்தருககுக்குறையாதும் உப்பு ஏற்றுமதி செய்தல்வேண்டும்.

7. ஒப்பந்தபத்திரத்தைக்கொண்ட உறையின் இடப்பக்க மேல்மூலையில் "உப்பு ஏற்றுமதிசெய்தற்கு ஒப்பந்தம்" என்றுஎழுதி அப்பத்திரத்தை 1918 ம் ஆண்டு கார்த்திகைமீ 9 ந் திகதி, சனிக்கிழமை மத்தியானம் திருக்கோனமலை உதவி இராஜகாரியஸ்தர்கந்தோரில் கிடைக்கத்தக்கதாய் அனுப்பல் வேண்டும் 1 (a), 1 (b), 1 (c), 2 (a), 2 (b), 2 (c) என்பவற்றிலுக்கு வேறு வேறு விகிதங்கள் குறிக்கப்படல் வேண்டும்.

8. திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டுப் பெறும் அச்சுபிரதிகளிலேயே ஒப்பந்தம் எழுதல் வேணடும், அப்படி எழுதியனுப்பப்படாத ஒப்பந்தங்கள அங்கீகரிக்கப்படமாட்டா.

9. திருக்கோணமலைக் கச்சேரியில் ரூபா ஐம்பது (ரூபா 50) கட்டிய பற்றுச்சீட்டுக்காட்டி ஒப்பந்த அச்சுப்பிரதிகள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். யாதொரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் உதவி இராஜகாரியஸ்தர் அல்லது அவரது தத்துவம்பெற்ற பிரதிகாரியஸ்தர் எழுதிய அறிவித்தல் கிடைத்த ஏழு நாளில் ஒப்பந்த உடன்படிக்கை நிறைவேற்றவும் தகுந்த பிணை கொடுக்கவும் எவரும் தவறினால், மேற்சொல்லியபடி கட்டிய தொகையை இழநதுவிடுவதுமன்றி, அப்படித் தவறியவர் அரசாட்சி ஒப்பந்தங்கள் எவற்றும் எக்காலத்திலுஞ்சேராதபடி தவறினோர் நாம அட்டவணையில் அவருடைய பெயர் எழுதப்பட நேரிடும். ஒப்பந்தம் கையொப்பமிட்டபின் கட்டிய ரூபா 50 கொடுக்கப்படும்.

10. ஒப்பந்தப்படி ஏற்பாட்டை நிறைவேற்றற்குப் பிணைப்பட உடன்படும் இரண்டு தகுந்த ஆட்கள் கையொப்பமும் விலாசமுமிட்ட கடிதம் ஒன்று ஒவ்வொரு ஒப்பந்தப்பத்திரத்தோடும் அணைக்கப்படல் வேண்டும்.

11. ஒப்பந்த ஏற்பாட்டை சரிவர நிறைவேற்றப் பிறப்பிக்கப்படும் சீட்டில் போதிய பிணைகாரர் கையொப்பமிடல் வேண்டும். சீட்டின் தொகையும் வேறு பிறவிபரங்களும் திருக்கோணமலைக் கச்சேரியில் கேட்டு அறியலாம்.

12. திருக்கோணமலை உதவி காரியஸ்தருக்கு ஒப்பந்த மூலப்பிரதி அனுப்பிய திகதியிலேயே கொழும்பு கௌரவ அரசிறை நிருவாகரவர்கட்கு இணைப்பிரதி தபால் மார்க்கமாயனுப்பப்படல் வேண்டும்.

13. மேற்குறித்த நிபந்தனைகள் யாவும் யதார்த்தமாய் நிறைவுற்றாலன்றி ஒப்பந்தப்பத்திரங்கள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

14. யாதும் ஆட்சேபமின்றி ஒப்பந்த பத்திரங்கள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் தள்ளிவிடும் உரித்தையும் ஒப்பந்தத்தில் ஓர் பகுதியை ஏற்கும் உரித்தையும் அரசாட்சியார் உடையர்.

எல். ஜே. பீ. றேணர்.
உதவி இராஜகாரியஸ்தர்.

திருக்கோணமலை கச்சேரி,
1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 10 ந் உ.

---

சுப்பிரீம்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிரீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் மேற்கு டிஸ்திரிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1918 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10 ந் திகதியாகிய வியாழக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

டபிள்யு. டி. விவேரா,
கொழும்பு பிஸ்கால் கந்தோர், பிஸ்காலுக்காக.
1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 12 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் சில்லோ புத்தளம் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1918 ம் ஆண்டு ஒக்டோபர்மாதம் 10 ந் திகதியாகிய வியாழக் கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொலலப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

எஸ். டி. சமறசிங்க,
குருநாகல் பிஸ்கால் கந்தோர், பிஸ்காலுக்காக.
1918 ம் ஆண்டு செப்றெம்பர்மீ 17 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்றிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1918 ம் ஆண்டு ஐப்பசிமாதம் 10 ந் திகதியாகிய வியாளக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

பி. கொன்ஸ்றன்றயின்,
இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர், பிஸ்கால்.
1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 11 ந் உ.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.